**Teachers Eligibility Test - Paper 1**

**(ii) Language I Tamil (Classes I to V)**

## முதல் வகுப்பு

| | திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| 1. | பார்த்தறிதல் | | |
| 1.1. | படங்களைப் பார்த்து பெயர்களைக் கூறுதல் | * குழந்தைகளுக்கு அறிமுகமான, விருப்பமுடைய படங்கள் | * விலங்கு, பறவைகளின் படங்களைப் பார்த்து அவற்றின் செயல்களை வாய்மொழியாகக் கூறச்செய்தல் |
| 2. | கேட்டல் | | |
| 2.1 | ஓசை நயமிக்க குழந்தைப் பாடல்களைக் கேட்டல் | * குழந்தைகள் விரும்பும் வகையில் அமைந்த பாடல்கள் – பறவைகள், விலங்குகள், உணவுப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள் போன்ற தலைப்புகளில் அமைந்த ஒலிநயமிக்க பாடல்கள் (4 அடி) | * எளிய, ஒலி நயமிக்க குழந்தைப் பாடல்களைச் செய்கைகளுடன் பாடுதல் |
| 2.2 | குழந்தைகள் விரும்பும் கதைகளைக் கேட்டல் | * குழந்தைகள் விரும்பும் படக்கதைகள், சிந்தனையைத் தூண்டும் கதைகள் – விலங்குக் கதைகள் | * கதைகளை உரிய மெய்ப்பாடுகளுடன் குழந்தைகளுக்குக் கூறுதல்/ நடித்துக் காட்டுதல்/ நடிக்கச் செய்தல் |
| 2.3 | ஒலிகளை வேறுபடுத்துதல் | * பறவைகள், விலங்குகள், உந்து வண்டிகள் எழுப்பும் ஒலிகள் அடங்கிய பாடல்கள் | * பொம்மலாட்டம் போன்ற செயல்கள் வழி பறவைகள், விலங்குகள், உந்து வண்டிகள் முதலியனவற்றின் ஒலிகளை ஆசிரியர் வெளிப்படுத்துதல்– வேறுபாடு அறியத்தக்க வகையில் வினாக்கள் கேட்டல் |
| 3. | பேசுதல் | | |
| 3.1 | தன் பெயர், குடும்பத்தினர் பெயர், ஊர்ப்பெயர் கூறுதல் | * குழந்தை தன் பெயர், குடும்பத்தினர் பெயர், ஊர்ப் பெயரைக் கூறுதல் | * குழந்தைகளிடம் வினாக்கள் வழி பெயர், ஊர், முதலியன பற்றிய தகவல்களைக் கூறச்செய்தல் |
| 3.2 | குழந்தை தன்னைச் சுற்றியுள்ளவை பற்றிப் பேசுதல் / பாடுதல் | * ஊர், சுற்றுப்புறம் முதலியனவற்றைக் காட்டும் படம் | * குழந்தை தன்னைப் பற்றியும், தன் வீட்டுச் சூழல் மற்றும் தனக்குப் பிடித்தவை பற்றியும் பேசுதல் / பாடுதல் |
| 3.3 | கதை கூறுதல் | * பல்வகைப் பொருள், உயிரினம் | * படங்களைப் பார்த்துக் கற்பனையாகக் கதை |

| திறன் பகுதி / திறன் | | | பாடப்பொருள் | | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|---|---|
| | | | உள்ள படங்கள் | | கூறுதல் |
| 3.5 | தான் அதுவாக மாறிப் பேசுதல் | * | நிகழ்ச்சிகளைக் காட்டுகின்ற விலங்குகள், பறவைகள் அடங்கிய படம் | * | விலங்குகள், பறவைகள் பேசுவதுபோல் பேசி நடித்தல் |
| 4. | படித்தல் | | | | |
| 4.1 | படத்தைப் பார்த்து வாய்விட்டுப் பெயர் சொல்லுதல், அறிந்த எழுத்துகளை அடையாளப்படுத்துதல். | * | பட்டம், படம், அணில், மரம், மாமரம், பாப்பா, மாடம் போன்றவற்றின் படங்கள் | * | படங்களிலுள்ள பெயர்களைப் படித்தல். எழுத்துகளை ஆசிரியர் ஒலித்துக்காட்டிக் குழந்தைகளை ஒலிக்கச் செய்தல் |
| 4.2 | இரண்டு சொற்களை இணைத்துப் படித்தல் | * | இருசொல் தொடர்கள் ( படம் பார், பாப்பா பார்) | * | தொடர்களை உரிய ஒலிப்போடு ஒலித்துக் காட்டிக் குழந்தைகளை ஒலிக்கச் செய்தல் |
| 5. | எழுதுதல் | | | | |
| 5.1 | நேர்கோடு, வளைவுகோடு, சாய்வுகோடுகளை எழுதுதல் | * | எழுது பழகு செயல்கள் | * | நுண்தசைப் பயிற்சி (தாள்பந்து, களிமண்ணைப் பிசைதல், எழுதுகோலைப் பிடித்தல்) சுழியம், நேர்கோடு, சாய்கோடு, வளைகோடு இடுதல், புள்ளிகளை இணைத்துப் படம் வரைதல் |
| 5.2 | புள்ளிகளை இணைத்து எழுதுதல் | * | புள்ளி வடிவிலான எழுத்துகள் | * | புள்ளிகளை இணைத்து வரியொற்றி எழுதுதல் |
| 5.3 | பார்த்து எழுதுதல் | * | படம், பட்டம், மடம், மட்டம், பலம் போன்ற சொற்கள் | * | சொற்களைப் பார்த்து எழுதுதல் |
| 5.4 | சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுதல் | * | மாணவர் அறிந்த சிறுசிறு சொற்கள். (பழம், மரம், அணில், அப்பம்) | * | சொற்களை உரிய ஒலிப்போடு ஆசிரியர் சொல்லுதலும் மாணவர் எழுதுதலும் |
| 5.5 | இருசொற்களை இணைத்து எழுதுதல் | * | இயல்புப் புணர்ச்சிக்குரிய சொற்கள் | * | சொற்களை இணைத்து எழுதச் செ ய்தல் (அப்பம் தா, பாட்டுப் பாடு, கதைசொல்) |
| 6. | படைப்பாற்றல் | | | | |
| 6.1 | படங்களுக்குப் பொருத்தமான வண்ணம் தீட்டுதல் | * | பூ, பழம், பந்து முதலிய படங்கள் | * | படங்களுக்குப் பொருத்தமான வண்ணம் தீட்டச் செய்தல் |
| 6.2 | அச்சுப் பதித்து உருவங்கள் உருவாக்குதல் | * | கத்தரிக்காய், வெண்டைக்காய், இலை முதலிய அச்சுகள் | * | அச்சுகளைப் பயன்படுத்தி விருப்பமான உருவங்களைப் பதித்துக் காட்டுதல் |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| 6.3 கதை சொல்லுதல் | * நிகழ்ச்சிகளைக் காட்டும் படங்கள் | * மாணவர் தாங்கள் பார்த்த நிகழ்வுகளைக் கூறுதல் |
| **7. நடைமுறை இலக்கணம்** | | |
| 7.1 ஒத்த ஓசையுடைய சொற்களை இனங்காணல் | * நெல், புல், பல், கல், கடை, நடை, உடை, வடை போன்ற சொற்கள் | * ஒத்த ஓசை வெளிப்படுமாறு சொற்களை ஒலித்தல்– ஒலிக்கச் செய்தல் |
| 7.2 குறிலை நெடிலாகவும், நெடிலைக் குறிலாகவும் மாற்றுதல் | * கல்–கால்; விடு–வீடு; என்–ஏன். மாடு–மடு; நாகம்–நகம்; காலம்– கலம் போன்ற சொற்கள் | * குறிலை நெடிலாகவும், நெடிலைக் குறிலாகவும் மாற்றி சொல் உருவாக்குதல் |
| **8. தானே கற்றல்** | | |
| 8.1 பட அகரமுதலியைப் பயன்படுத்துதல் | * பட அகரமுதலி (Pictorial Dictionary) அகல், ஆடு, இலை, ஈசல்.... (உயிரெழுத்துகளை முதலாகக் கொண்ட படங்கள்) | * படங்களை அகரமுதலிப்படி வரிசைப்படுத்துதல் |
| **9. சொல்லாட்சித் திறன்** | | |
| 9.1 சொற்களஞ்சியம் பெருக்குதல் | * நிறங்கள், கிழமைகள், மாதங்கள், சுவைகள், எண்ணுப் பெயர்கள், உறவுப்பெயர்கள், திசைப் பெயர்கள் அறிதல். அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி. பாரதிதாசன் ஆத்தி சூடி | * பாடப்பொருள் சொற்களை அறிந்து கூறச் செய்தல் |
| | * சிறுவர் நூல்கள் | * நூலகத்திலுள்ள சிறுவர் நூல்களைப் படித்தல் |

## இரண்டாம் வகுப்பு

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| **1. கேட்டல்** | | |
| 1.1 இயற்கை சார்ந்த பாடல்களைக் கேட்டல் | * இயற்கையைக் கண்டு மகிழும் வகையில் அமைந்த பாடல்கள் – பசு, நிலா, சூரியன் | * பாடல்களைப் பாடி, குழந்தைகளிடம் எளிய வினாக்கள் கேட்டல் |
| 1.2 சிந்தனையைத் தூண்டும் கதைகளைக் கேட்டல் | * புதிர்க்கதைகள், சிந்தனையைத் தூண்டும் கதைகள் | * மாணவர்களை விடுகதை, கதை கூறச் செய்தல் |
| 1.3 குழு அறிமுக உரையாடலைக் கேட்டல் | * வகுப்பில் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துகொள்ளும்வகையில் அமைந்த உரையாடல். தன் பெயர், பெற்றோர் பெயர், ஊர்ப் பெயர், தனக்குப் பிடித்தது பற்றிக் கூறும் முறையில் அமைந்த உரையாடல் | * குழந்தை குழுவில் தன்னைப் பற்றிக் கூறுதல் |
| **2. பேசுதல்** | | |
| 2.1 தன்னைச் சுற்றியுள்ளவை சார்ந்த விவரங்களைப் பேசுதல் | * பறவைகள், விலங்குகள், இயற்கைத் தாவரங்கள் பற்றிய | * தன்னைச் சுற்றியுள்ள சூழல் பற்றிப் பேசுதல் |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | உரையாடல் | * தொலைக்காட்சியில் பார்த்த நிகழ்ச்சி பற்றிப் பேசச் செய்தல் |
| 2.2 உரிய ஒலிப்புடன் பாடுதல் (ல,ள,ழ, எழுத்துகள் அமைந்த பாடல்கள்) | * மயங்கொலிச்சொற்கள் (ல, ள, ழ, ர, ற, ந, ண, ன) அமைந்த பாடல்கள்<br>(எ.கா) அழகிய தமிழில் எழுதுங்கள் | * பாடல்களைப் பாடச் செய்தல், குழந்தைகள் பாடுதல் |
| 2.3 படக் கதையைப் பார்த்து நிகழ்வைக் கூறுதல். | * நடைமுறை வாழ்க்கை நிகழ்வுகள் அமைந்த படங்கள் | * படங்களைப் பார்த்து நிகழ்வுகளைத் தொடர்புடன் கூறுதல் |
| 2.4 வினா எழுப்பும் திறன் | * யார், என்ன, எதை, ஏன் ஆகிய வினாக்களைக் கேட்கத் தக்க படங்கள் | * படம் பார்த்துக் குழந்தைகளை வினா கேட்கச் செய்தல் |
| **3. படித்தல்** | | |
| 3.1 படங்களோடு கூடிய சொற்களைப் படித்தல் | * படங்களோடு கூடிய சொற்கள் | * சொற்களை எழுத்துக்கூட்டிப் படித்தல் |
| 3.3 எளிய சந்தப் பாடல்களைப் பாடுதல் | எளிய சந்தப்பாடல்கள் (விளையாட்டுப் பொருள்கள், இயற்கை, தாவரம், விலங்கு, பறவை, உணவுப் பொருள்கள்) | * பாடல்களைச் சந்தத்தோடு பாடச் செய்தல் |
| 3.4 சிறுவர்படக் கதைகளைப் படித்தல் | * விலங்குகள், பறவைகள் பேசிக் கொள்வது போன்ற கதைப்படங்கள் | * கதைப்படங்களைப் படிக்கச் செய்தல் |
| 3.5 வடமொழி ஒலிக்கான எழுத்துகளைப் படித்தல் | * ஜ, ஸ, ஷ, ஹ, ஸ்ரீ, க்ஷ ஆகிய எழுத்துகள் கொண்ட சொற்கள் | * வடமொழி ஒலியுடைய எழுத்துகளைப் படிக்கச் செய்தல்<br>* |
| **4. எழுதுதல்** | | |
| 4.1 படங்களைப் பார்த்துப் பெயரை எழுதுதல் | * யானை, வீடு, குடை, கிளி போன்ற படங்கள் | * படங்களைப் பார்த்து அவற்றிற்குரிய பெயர்களை எழுதச் செய்தல் |
| 4.2 படங்களைப் பார்த்துச் சிறுதொடர் எழுதுதல் | * மாடு மேய்தல், நாய் குரைத்தல், சிறுவர் விளையாடுதல் போன்ற படங்கள் | * படத்தைப் பார்த்துத் தொடர் உருவாக்குதல் |
| 4.3 எளிய கதையிலிருந்து வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுதல் | * படக்கதைகள் | * எளிய கதையிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை எழுதுதல் |
| 4.4 சொல்லக் கேட்டு சொற்களை எழுதுதல் | * எளிய அறிந்த சொற்கள் | * சொல்லக் கேட்டும் சொல்லிக் கொண்டும் எழுதுதல் |
| 4.5 வருணனைச் சொற்களை அடையாளம் கண்டு எழுதுதல் | * நறுமணம் மிக்க மலர், உயர்ந்த மரம் போன்ற வருணனைச் சொற்கள் | * படங்களைப் பார்த்து வருணனைச் சொற்களை எழுதுதல் |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| 4.6 வடமொழி ஒலிக்கான எழுத்துகளை எழுதுதல் | * எவரெஸ்ட், ஜனவரி, காஷ்மீர், ஸ்ரீ நகர் போன்ற பெயர்கள் | * வடமொழி ஒலிஎழுத்துகளை எழுதச்செய்தல் |
| **5. படைப்பாற்றல்** | | |
| 5.1 விருப்பமான படம் வரைந்து வண்ணம் தீட்டுதல் | * வண்ணம் தீட்டுவதற்கு ஏதுவான படங்கள் | * மாணவர், தம் விருப்பத்திற்கேற்றபடி படம் வரைந்து பொருத்தமான வண்ணம் தீட்டுதல் |
| 5.2 காகித மடிப்புகளைக் கொண்டு உருவம் செய்தல். பெருவிரல் அச்சிலிருந்து உருவங்கள் உருவாக்குதல். | * காகித உருவங்கள் (எ.கா) கப்பல், தொப்பி போன்றவை. பெருவிரல் அச்சு உருவங்கள் (எ.கா) கத்தரிக்காய், தொப்பி | * பாடநூலிலுள்ள உருவங்களைச் செய்தல், விருப்பமான உருவங்களை உருவாக்கல் |
| 5.3 கதை கூறுதல் | * படநிகழ்வுகள் கொண்ட படங்கள் | * பாடநூலிலுள்ள படங்களைப் பார்த்து கதை கூறுதல் |
| 5.4 செயல்திட்டம் மேற்கொள்ளல் | * செயல்திட்டம் தொடர்பான தலைப்புகள் (களங்கள்) | * படங்களைத் தொகுத்து வரைந்து படத்தொகுப்பு தயாரித்தல் |
| **6. நடைமுறை இலக்கணம்** | | |
| 6.1 ஒத்த ஓசையுடைய சொற்களை உருவாக்குதல் | * ஒத்த ஓசையுடைய சொல்தொகுதி | * ஒத்த ஓசையுடைய சொற்களை அடுத்தடுத்துக் கூறுவதான குழுவிளையாட்டு<br>* |
| 6.2 ஒருமை, பன்மை ஆக்கம் | * ஒருமை பன்மைச்சொற்கள் (எ.கா) பறவை–பறவைகள், மரம்–மரங்கள் | * சரியான பன்மைச் சொற்களைக் கண்டு அடிக்கோடிடல்/படித்தல் |
| **7. தானேகற்றல்** | | |
| 7.1 எளிய பட அகரமுதலியைப் பயன்படுத்துதல் | * உயிர், மெய், உயிர்மெய்யெழுத்துகள் அடங்கிய பட அகரமுதலி (எ.கா) கரும்பு, காகம். . . | * படங்களின் பெயர்களை அகரவரிசைப்படி எழுதுதல் |
| 7.2 சொற்களை அகரவரிசைப்படுத்துதல் | * உயிர்மெய்யெழுத்துகளை முதலாகக் கொண்ட சொற்கள் | * ப,ம வரிசையிலுள்ள சொற்களை வரிசைப்படி எழுதுதல் |
| **8. சொற்களஞ்சியப் பெருக்கம்** | | |
| 8.1 சொற்களஞ்சியம் பெருக்குதல் பெயர்ச் சொற்களைக் கூறுதல் எதிர்ச்சொற்கள் கூறுதல் | . படை – தடை – உடை – கடை , படு – பசு – பல் – பனை–பணம் – பலம் – பழம் – படம் போன்ற பெயர்ச்சொற்கள் | * எழுத்துகளை இணைத்து எழுதுதல்<br>* சொல் விளையாட்டு<br>* முதல், இடை, கடையெழுத்தை மாற்றிப் புதிய சொல் உருவாக்குதல் |
| | * பள்ளி, மதுரை, காலை, வகுப்பறை, நூல், கிளை, இனிப்பு போன்ற பெயர்ச்சொற்கள் | |
| | * எதிர்ச்சொற்கள் | * பாடநூலிலுள்ள படத்தினைப் பார்த்து உரிய |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | | எதிர்ச் சொற்களை எழுதுதல் |
| | * சொல்லின் இறுதி எழுத்தைக் கொண்டு உருவாக்கப்பட்ட சொற்கள் (எ.கா) கம்பு – புன்னகை – கைப்பை – பையன் | * படம் பார்த்துச் சொற்களை உருவாக்குதல் |
| | * ஆத்திசூடி(ஔவையார்), கொன்றை வேந்தன், உலகநீதி | * விழுமங்களின் சிறப்பினை உணர்த்தல் |
| | * சிறுவர் கதை நூல்கள் | * பள்ளி நூலகத்தைப் பயன்படுத்தும் முறை– படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் பயிற்சிகள் தருதல் |

## மூன்றாம் வகுப்பு

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| **1. கேட்டல்** | | |
| 1.1 வருணனை, விடுகதைப் பாடல்களைக் கேட்டல் | * வருணனைப் பாடல்கள், விடுகதைப் பாடல்கள் | * வருணனைச் சொற்களைக் கூறச் செய்தல் |
| 1.2 சிந்தனையைத் தூண்டும் கதைகளைக் கேட்டல் | * திருக்குறளுக்கேற்ற சிந்தனையைத் தூண்டும் கதைகள் | * கற்பனைக் கதைகள் கதையின் தொடக்கத்தைக் கூறி முடிவைக் குழந்தையிடம் கேட்டல். கதையின் முடிவைக்கூறி முன் பகுதியைக் கேட்டல் |
| 1.3 புதிர்களைக் கேட்டுப் புரிந்துகொண்டு விடை கூறுதல் | * புதிர், விடுகதைகள் | * புதிர்கள், விடுகதைகளை ஆசிரியர் கூற மாணவர்களை விடுவிக்கச் செய்தல் |
| 1.4 வானொலி / தொலைக்காட்சி செய்திகளைக் கேட்டல் | * வானொலி, தொலைக்காட்சிச் செய்திகள். | * வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கேட்டு வகுப்பறையில் கலந்துரையாடல் |
| **2. பேசுதல்** | | |
| 2.1 தங்குதடையின்றிப் பேசுதல் | * தன் ஊர், தெரு, பள்ளி, கடைவீதி, பூங்கா, நூலகம், விழாக்கள் பற்றிய தகவல்கள் | * தன் ஊரைப் பற்றியும், தான் வாழும் சூழல் பற்றியும் இயல்பாகத் தங்கு |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
| --- | --- | --- |
| | (ஊர்,தெரு, விளையாட்டிடம், பொதுவிடம், நூலகம்) | தடையின்றிப் பேசச்செய்தல் |
| 2.2 உரிய ஒலிப்புடன் பேசுதல், பாடுதல் (ல, ள, ழ, ண, ன, ர, ற,) | * மயங்கொலி எழுத்துகள் அமைந்த பாடல், கதைகள், சொற்றொடர்கள் | * பாடநூலிலுள்ள பாடல்களைப் பாடச்செய்தல், சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் பேசச் செய்தல் |
| 2.3 வருணனை கலந்து பேசுதல் | * பொம்மலாட்ட வடிவில் அமைந்த வருணனைக் கதைப்பாட்டு. (விலங்கு, பறவை பற்றியது) | * பார்த்து மகிழ்ந்த இடங்களைப் பற்றியோ, பொருள்களைப் பற்றியோ வருணனை கலந்து பேசுமாறு பயிற்சியளித்தல் |
| 2.4 கலந்துரையாடுதல் | * வகுப்பறைத் தூய்மை, தொலைக்காட்சியில் பார்க்க வேண்டிய நிகழ்ச்சிகள், களப்பயணம், பள்ளி ஆண்டுவிழா போன்ற தலைப்புகள் | * குறிப்பிட்ட நிகழ்வைச் செயல்படுத்துவதற்குக் கலந்துரையாடித் திட்டமிடல்<br>* படங்களைப் பார்க்கச் செய்தும் மாணவன் அறிந்த இடம், சூழல், உறவினர் சார்ந்த சொற்களைக் கூறியும் உரையாடல் வடிவில் அமைந்த கதைப்பாடல்களைப் படிக்கச் செய்தும் கலந்துரையாடச் செய்தல் |
| **3. படித்தல்** | | |
| 3.1 அறிவிப்புகள், விளம்பரங்கள், சாலைக் குறியீடுகளைப் படித்தல் | * அறிவிப்பு, விளம்பரம், சாலைக்குறியீடு தொடர்பான படங்கள், சொற்கள் | * வரிசையாகச் செல்லவும், உங்கள் முறைவரும்வரை காத்திருக்கவும், இடப்பக்கம் திரும்புக, பள்ளிப்பகுதி மெதுவாகச் செல்லவும், மருத்துவமனை ஒலி எழுப்பாதே – போன்ற வகையில் அமைந்த அறிவிப்புகளையும் விளம்பரங்களையும் படிக்கச் செய்தல் |
| 3.2 கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள், கதைகளை உரிய ஒலிப்புடன் படித்தல் | * மழை, மலை, காடுகள் பற்றிய கதைகள் | * விலங்குகள், பறவைகள், புதிர்கள் ஆகியவை பற்றிய கதைகளை உரிய உச்சரிப்புடன் படித்தல், படம் |

| திறன் பகுதி / திறன் | | பாடப்பொருள் | | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|---|
| | | | | பார்த்து வினாக்களுக்கு ஏற்ற விடை தருதல் |
| 3.3 சிறுவர் இதழ்களைப் படித்தல் | * | சிறுசிறு கதைகள், துணுக்குகள், புதிர்கள், குறுக்கெழுத்துப் போட்டிகள், பாடல்கள் போன்றவை அடங்கிய சிறுவர் இதழ்கள் | * | மாணவர்களுக்குரிய இதழில் வெளிவந்துள்ள சிறுகதைகள், பாடல்கள், துணுக்குகள், புதிர்கள் போன்ற செய்திகளைப் படிக்கத் தூண்டுதல் |
| 4. எழுதுதல் | | | | |
| 4.1 படத்தைப் பார்த்துச் சிறுசிறு தொடர்கள் எழுதுதல் | * | சிறுசிறு தொடர்கள் (எ.கா) மீன் துள்ளுகிறது, மீனவர் மீன் பிடிக்கிறார், பறவை பறக்கிறது | * | படத்தைப் பார்த்து சிறுசிறு தொடர்கள் அமைத்தல், அறிவிப்புகள் எழுதுதல், படம் பற்றிய விவரங்களைத் தொகுத்துத் தொடர்களை எழுதுதல் |
| 4.2 இடைவெளிவிட்டு எழுதுதல் | * | முறையான இடைவெளியுடன் எழுதப்பட்ட தொடர்கள் | * | சொற்களடங்கிய ஒரு பத்தியைக் கொடுத்தல். மாணவர் அவற்றைப் பொருளுக்கேற்றவாறு இடைவெளியிட்டு எழுதச் செய்தல். |
| 4.3 பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல் | * | உரைப்பகுதி | * | பத்தி தொடர்பான எளிய வினாக்கள் கேட்டல்– பொருத்தமான விடையளித்தல் |
| 4.4 புதிர்கள் / வருணனைத் தொடர்கள் எழுதுதுல் | * | படங்களும் அவற்றிற்குப் பொருத்தமான புதிர்கள், வருணனைத் தொடர்கள் (எ.டு) விலங்குகள், பறவைகள் குறித்தவை | * | படங்களைப் பார்த்துப் பொருத்தமான புதிர்களை எழுதச் செய்தல், விலங்குகள், பறவைகள் படங்களைப் பார்த்து வருணித்து எழுதச் செய்தல் |
| 4.5 விவரித்து எழுதுதல் | * | இடம், விரும்பும் பறவை, விலங்கு முதலியவற்றைப் பற்றிய குறிப்புச் சட்டகம் | * | படங்களையும் குறிப்புகளையும் கொடுத்து விவரித்து எழுதச் செய்தல் |
| 5. படைப்பாற்றல் | | | | |
| 5.1 படத்தை நிறைவு செய்தல் | * | படத்தின் ஒருபகுதி | * | மாணவர்கள் வரைவதற்கு ஏற்ற எளிய படங்களின் பகுதியை அளித்து படத்தை நிறைவு செய்யச் செய்தல் |
| 5.2 உருவங்களின் வண்ணத்திற்கு ஏற்பத் தானியங்கள் ஒட்டுதல் | * | தானியங்கள்(கூலங்கள்) ஒட்டுவதற்கேற்ற படங்கள் | * | பறவை, விலங்கு படங்களை வரையச் செய்து அதன் வண்ணத்திற்கு ஏற்ப தானியங்களை ஒட்டச் செய்தல் |
| 5.3 சொற்களைப் பயன்படுத்திக் கதை உருவாக்கிக் கூறுதல் | * | மாலை நேரம், மேகம், மழை, வெள்ளம் போன்ற கதை | * | சொற்களைக் கொடுத்து கதை உருவாக்கச் செய்தல் |

| திறன் பகுதி / திறன் | | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | | உருவாக்கத் தக்க சொற்கள் | |
| 5.4 | செயல்திட்டம் | * ஈரெழுத்து, மூவெழுத்துச் சொற்கள் அடங்கிய படங்கள் | * மாணவர்களிடம் தாள் மற்றும் அட்டைகளை அளித்து செயல்கள் அளித்தல், செய்தித்தாள், சிறுவர் இதழ்களையும் தொகுக்கச் செய்து வகுப்பறையில் படித்துக் காட்டச் செய்தல், விடுகதைகள், பழமொழிகளைத் தொகுக்கச் செய்தல் |
| **6.** | **நடைமுறை இலக்கணம்** | | |
| 6.1 | எழுவாய்க்கேற்ற வினைமுற்று எழுதுதல் | * எழுவாய்க்குப் பொருந்திய வினைமுற்று கொண்ட தொடர்கள்<br>(எ.கா) முகிலன் வந்தான்<br>கவிதா வந்தாள்<br>மக்கள் கூடினர்<br>மாடு வந்தது – மாடுகள் வந்தன<br>பறவை பறந்தது – பறவைகள் பறந்தன. | * எழுவாயைக் கொடுத்துப் பொருத்தமான வினைமுற்றை எழுதச் செய்தல் (ஒருமை, பன்மைக்கேற்ற வினைமுற்றுகள்) |
| **7.** | **தானே கற்றல்** | | |
| 7.1 | பட அகர முதலியைப் பயன்படுத்துதல் | * உயிர், உயிர்மெய் எழுத்துகள் அடங்கிய சொற்கள் | * உயிர், உயிர்மெய் எழுத்துகள் அடங்கிய சிறிய எளிய சொற்களை அளித்து அவற்றை அகரவரிசைப் படுத்தச் செய்தல் |
| 7.2 | இரண்டாம் எழுத்துகளின் அடிப்படையில் (எதுகை) வரிசைப்படுத்துதல் | * ‘இரண்டாம் எழுத்து ஒன்றி வரும் சொற்கள் (எ.கா) மணம்–குணம், மடம்–குடம் | * சொற்களை இரண்டாம் எழுத்துகள் (எதுகை) அடிப்படையில் வரிசைப் படுத்தப் பயிற்சியளித்தல் |
| **8.** | **சொல்லாட்சித் திறன்** | | |
| 8.1 | சொற்களஞ்சியம் பெருக்குதல் | * செய்யுள் பகுதியிலுள்ள அருஞ்சொற்கள்<br>* திருக்குறள் கதைகள் (5) பாரதியார் ஆத்தி சூடி(12) , நல்வழி (3) | * பாடநூலிலுள்ள செய்யுள்பகுதி சொற்களுக்கு பொருளுணர்ந்து சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்<br>* சில எழுத்துகளைக் கொடுத்து அவற்றைக் கொண்டு பல சொற்கள் உருவாக்குதல்<br>ஒரு சொல்லில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி பல சொற்கள் உருவாக்குதல் |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | | * எதிர்ச்சொல் எழுதுதல், பொருளறிதல், சொற்றொடர் அமைத்தல் |
| | * குழந்தைநூல்கள் | * நூலக நூல்களிலுள்ள சொற்களைத் தேர்ந்தெடுத்து அவை தொடர்பான விவரங்களைச் சேகரித்து வரிசைப் படுத்துதல் |
| 8.2 மரபுச் சொற்களைப் பயன்படுத்துதல் | * விலங்குகள், பறவைகள் வாழிடங்கள் (எ.கா) முயல் – புதர், எலி – வளை, பறவை – கூடு, குதிரை – இலாயம். பறவை, விலங்குகளின் இளமைப் பெயர்கள், தங்குமிடம், ஒலிகள் மற்றும் தொகுப்புப் பெயர்கள் | * மரபுப்பெயர்களை எழுதத்தக்க பயிற்சிகள் |

## நான்காம் வகுப்பு

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| **1. கேட்டல்** | | |
| 1.1 ஓசைநயமிக்க கருத்துப் பாடல்களைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | * மறுமலர்ச்சிப் பாடல்கள், விழிப்புணர்வுப் பாடல்கள் (பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி, போன்றோர் பாடல்கள்) | * ஓசைநயம்மிக்க பாடல்களைக் கேட்டு புரிந்து கொள்ளச் செய்தல். |
| 1.2 நாட்டுப்புறக் கதைகளைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | * குழந்தைகளுக்கேற்ற நாட்டுப்புறக் கதைகள் | * கதையைக் கேட்டபின் வினாக்களுக்கு விடையளித்தல் |
| 1.3 சூழ்நிலையில் உற்றுக் கேட்ட விவரங்களைக் கூறுதல் | * நீர்நிலைகள், கடற்கரை, சந்தை, ஊர்த் திருவிழா, கண்காட்சி போன்ற இடங்களில் பேசப்படும் செய்திகள் | * கடற்கரைச் சூழலில் நடைபெறும் நிகழ்வுகளைக் கேட்ட பிறகு அது பற்றிய விவரங்களைக் கூறுதல் |
| **2. பேசுதல்** | | |
| 2.1 தங்கு தடையின்றி இயல்பாகப் பேசுதல் | * சிறப்புக்குரிய மனிதர், இடம், நிகழ்ச்சி | * தான் விரும்பும் ஒருவர்(காமராசர், அப்துல்கலாம் போன்றோர்), தான் விரும்பிய இடம் (குற்றாலம், முதுமலை |

| திறன் பகுதி / திறன் | | பாடப்பொருள் | | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|---|
| | | | | போன்றவை) பற்றிக் காரண காரியத்துடன் தங்கு தடையின்றிப் பேசச் செய்தல் |
| 2.2 விவாதங்களில் பங்கேற்றுப் பேசுதல் | * | செல்பேசி, மரபு சாரா எரிபொருள், நெகிழிப் பயன்பாட்டின் நன்மை தீமை | * | செல்பேசியின் நன்மை, தீமைகளை விவாதித்துப் பட்டியலிடுதல் |
| 2.3 வருணனை கலந்து பேசுதல் | * | இயற்கை சார்ந்த வருணனைகள் | * | குயில், சிங்கம், தேசியக் கொடி போன்றவற்றை வருணித்து எழுதுதல் |
| 3. படித்தல் | | | | |
| 3.1 கதைகளை நிறுத்தக் குறிகளுக்கேற்பப் படித்தல் | * | நான் உருவாகிய முறை – சிறுவருக்கேற்ற கதைகள் | * | உரிய நிறுத்தற்குறிகளிட்டு தொடரைப் படிக்கச் செய்தல் |
| 3.2 சுவரொட்டிகள்/அறிவிப்புகளைப் படித்தல் | * | அரசுத்துறை அறிவிப்புகள் (கல்வி, சுற்றுச்சூழல், வனம், போக்குவரத்து போன்றவை) | * | விளம்பரங்களைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல் |
| 3.3 கையெழுத்துக் கடிதங்களைப் படித்தல் | * | குழந்தைகளுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் அமைந்த கடிதம் (உறவுமுறைக் கடிதம்) | * | கையெழுத்து வடிவில் அமைந்த பாடப்பகுதியைப் படித்துப் புரிந்து கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல். |
| 3.4 பழமொழிகளைப் படித்தல் | * | வழக்கத்தில் உள்ள பழமொழிகளைப் பயன்படுத்துதல் (கதை, நாடகம், உரையாடல், பாடல் வாயிலாக) | * | பழமொழிகளைத் தொகுத்தெழுதிப் படித்தல் |
| 4. எழுதுதல் | | | | |
| 4.1 சொல்லக் கேட்டுப் பிழையின்றி எழுதுதல் | * | மயங்கொலியை எடுத்துக்காட்டத்தக்கத் தொடர்கள் | * | பாடங்களுக்குப் பின் அமைந்துள்ள பயிற்சிகளை பிழையின்றி எழுதுதல் |
| | * | உரைப்பகுதி, பத்தி | | |
| 4.2 பத்தியிலிருந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் | * | | * | பத்தியைக் கொடுத்து, அது தொடர்பான வினாக்களுக்குச் சரியான விடை எழுதுதல் |
| 4.3 புதிர்கள் எழுதுதல் | * | அறிவு செறிவூட்டும் கதைகள், துணுக்குகள் , விடுகதைகள் , புதிர்கள் போன்றவை, | * | படங்களைப் பார்த்து புதிர்களை உருவாக்கி எழுதுதல் |
| 4.4 கடிதம் எழுதுதல் | * | விடுப்புக்கடிதம் எழுதுதல் | | |
| 4.5 கட்டுரை / பாடல் எழுதுதல் | * | ஏதாவது ஒரு மரம் / ஆறு / தன் பயன் குறித்து கட்டுரை / பாடல் | * | கொடுக்கப்பட்ட தலைப்புகளில் கட்டுரை (அ) பாடல் எழுதப் பயிற்றுவித்தல் |

| திறன் பகுதி / திறன் | | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| **5.** | **படைப்பாற்றல்** | | |
| 5.1 | படம் பார்த்து வருணித்து எழுதுதல் | * மயில், வண்ணத்துப் பூச்சி, இயற்கை முதலியவற்றின் படங்கள் | * விலங்குகள் பறவைகள் பூக்கள் பற்றி வருணித்து எழுதுதல் |
| 5.2 | கதை உருவாக்குதல் | * வெவ்வேறு சூழல்களைக் குறிக்கும் படங்கள் | * குறிப்புகளைக் கொடுத்து, குழந்தைக்குப் பிடித்த சூழலைக் கொண்டு கதை உருவாக்குதல், எழுதுதல் |
| 5.3 | செயல்திட்டம் – படத்தொகுப்புத் தயாரித்தல் | * குழந்தைகள் வரைந்த / திரட்டிய படங்கள் | * செய்தித்தாளில் வரும் படங்களைத் தொகுத்துப் படத் தொகுப்புத் தயாரித்தல் |
| **6.** | **நடைமுறை இலக்கணம்** | | |
| 6.1 | திணைவகை கூறுதல் | உயர்திணை, அஃறிணை சொற்கள்<br>உயர்திணை – மாணவர், ஆசிரியர்<br>அஃறிணை – மரம், விலங்கு | * கொடுக்கப்பட்ட சொற்களை உயர்திணை, அஃறிணை என்று வகைப்படுத்துதல் |
| 6.2 | இடம், காலம் வகைகள் கூறுதல் | * இட வகை காட்டும் சொற்கள்<br>* கால வகை காட்டும் சொற்கள் | |
| **7.** | **தானே கற்றல்** | | |
| 7.1 | மரபுச் சொற்களைப் பயன்படுத்தல் | மரபுச் சொற்கள் அடங்கிய தொடர்கள்<br>(எ.கா.) குயில் கூவும், நரி ஊளையிடும், யானை பிளிறும். | * பெயர் மரபு, வினை மரபுச் சொற்களை அறியச் செய்தல் |
| 7.2 | அகரமுதலியைப் பயன்படுத்திப் பொருள் காணல் | * படங்களோடு கூடிய குழந்தைகள் அகரமுதலி | * அகரமுதலியைப் பயன்படுத்தி சொல் பொருள் கூறுதல்<br>* படங்கள் இல்லாத சொற்பொருள் அகரமுதலியைப் பயன்படுத்திப் பொருள் அறிதல், பாடப்பகுதியில் உள்ள சொற்களின் பொருளறிதல் |
| **8.** | **சொல்லாட்சித் திறன்** | | |
| 8.1 | சொற்களஞ்சியம் பெருக்குதல் | * புதிய சொற்கள், தொகுப்புப் பெயர்களை எழுதச் செய்தல் | * எதிர்ச்சொல் எழுதுதல், பிரித்து எழுதுதல், சேர்த்து எழுதுதல், பொருளறிதல், இணைச் சொற்கள் அமைத்தல் |
| 8.2 | மரபுச் சொற்களைப் பயன்படுத்துதல் | * தொகுப்புப் பெயர்கள் (எ.கா) தென்னந்தோப்பு, கரும்புத் | * தொகுப்புப் பெயர்களை எழுதச் செய்தல் |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | தோட்டம், ஆட்டு மந்தை, பறவைக் கூட்டம் | * கொடுக்கப்பட்ட செய்யுட் பகுதிகளில் காணப்படும் நீதிநெறிகளை உணர்ந்து பின்பற்றச் செய்தல் |
| | * புதிர் விளையாட்டு, மொழி விளையாட்டு<br>* செய்யுள் – நறுந்தொகை , திருக்குறள் (10) நல்வழி / மூதுரை – 3,<br>* தாலாட்டுப் பாடல் (நாட்டுப்பாடல்) | |

## ஐந்தாம் வகுப்பு

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| 1. கேட்டல் | | |
| 1.1 விழிப்புணர்வுப் பாடல்களைக் கேட்டல் | * பெண்கல்வி, மூடநம்பிக்கை, சுற்றுச்சூழல், அழகியல் போன்ற தலைப்பில் அமைந்த பாடல்கள் | * பாடநூல்களிலுள்ள பெண்கள் விழிப்புணர்வு, உடல்நலம் பேணுதல், விழுமப் பண்புகளை உணர்த்தும் விழிப்புணர்வுப் பாடல்களைக் கேட்டு, புரிந்து கொண்டு அதன்வழி பின்பற்றச் செய்தல். |
| 1.2 கலந்துரையாடலைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | * வட்டாரம் சார்ந்த தொழில்கள் – வேளாண்மை அன்றும் இன்றும் – விவாதம், உரையாடல், நேர்காணல் | * வேளாண்மை ஆய்வு மையம், தொடர்வண்டி நிலையம், செங்கற் சூளை போன்ற இடங்களுக்குச் சென்று அது சார்ந்த விவரங்களைத் தொகுத்து மாணவர்களைக் கலந்துரையாடி கேட்கச் செய்தல். |
| 1.3 நாடகத்தைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | * இலக்கிய நாடகங்கள் | * மாணவர்கள் புரிந்து கொள்ளத்தக்க எளிய இலக்கிய நாடகங்களை வகுப்பறையில் நடத்தியும், படித்தும் புரிந்து கொள்ளச் செய்தல். |
| 2. பேசுதல் | | |
| 2.1 குறிப்பிட்ட தலைப்பில் பேசுதல் | * குறிப்பிட்ட தலைப்புக் கொடுத்துப் பேசுதல், நான் ஆசிரியரானால், நான் அமைச்சரானால், எனக்கு | * மாணவர்கள் வயது நிலைக்கேற்ப அவர்களுக்குப் பிடித்த |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | இறக்கை இருந்தால், நான் பார்த்த இடம், திருவிழா போன்ற தலைப்பு | கற்பனைக் கருத்துகளைப் பேசுதல், சூழல் அளித்து பேசச் செய்தல்; சுற்றுப்புறச்சூழல், சேமிப்பு போன்ற சமூக பயன்பாட்டுக் கருத்துகள் சார்ந்து பேசப் பயிற்றுவித்தல். |
| 2.2 இயல்பாக உரையாடுதல் | * உரையாடல், வழக்கில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களும் அவற்றிற்கு இணையான தமிழ்ச் சொற்களும் | * மாணவர்கள் களப்பயணம் சென்று வந்த / புதிதாகப் பார்த்த இடங்கள் குறித்து இயல்பாக தமிழில் பேசச் செய்தல்; பாடநூலில் அளிக்கப்பட்டுள்ள உரையாடல் போன்று சூழல் அமைத்து மாணவர்களை இயல்பாக உரையாடப் பயிற்றுவித்தல். |
| 2.2 நாடகங்களில் பங்கேற்று நடித்தல் | * இலக்கிய நாடகம்– அமைதித்தூது, குமணவள்ளல், கொடைஉள்ளம் போன்றவை | * நாடகக் கதாபாத்திரங்களாக மாணவர்களை நடித்துக் காட்டச் செய்தல், ஆண்டு விழா, பள்ளி விழாக்களில் குறிப்பிட்ட பாத்திரங்களேற்றுப் பேசி நடிக்கச் செய்தல். |
| 3. படித்தல் | | |
| 3.1 எண் குறிப்புக் கொண்ட விவரங்களைப் படித்தல் | * அங்காடி விலைப்பட்டியல், மருத்துவமனை வரைபடம், பேருந்துக் கால அட்டவணை | * தொடர்வண்டி கால அட்டவணை, பொருட்காட்சி அறிவிப்பு, பேருந்து கால அட்டவணை போன்ற மக்கள் கூடும் இடங்களில் உள்ள எண் விவரம் சார்ந்த அறிவிப்புகளைப் படிக்கவும், புரிந்து கொள்ளவும் பயிற்சிளித்தல். |
| 3.2 அழைப்பிதழ்கள், நிகழ்ச்சி அறிவிப்புகள், துண்டு வெளியீடுகளைப் படித்தல் | * பள்ளியில் அறிவியல் கண்காட்சி, தமிழ்ச் செம்மொழி இலக்கிய மன்றங்கள் நடத்துவதற்கான அழைப்பிதழ்கள், அறிவிப்புகள், துண்டு வெளியீடுகள் | * அழைப்பிதழ்களைப் படித்து புரிந்து கொள்வதுடன் உருவாக்கச் செய்தல். |
| 3.3 செய்தித்தாள் படித்தல் | * சந்திராயன் பற்றிய செய்தி, செம்மொழி மாநாடு மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான செய்திகள் | * செய்தித்தாள்களில் வெளியாகும் மாணவர்களுக்கு ஏற்ற செய்திகளைத் திரட்டச் செய்தல், படித்து புரிந்து கொள்ளச் செய்தல்; அது குறித்து பேச் செய்தல். |

| | திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| 3.4 | நாடகங்களைக் குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்தல் | * இலக்கிய நாடகம் | * பாடநூலிலுள்ள நாடகம், நூலக நூல்களிலுள்ள சிறுவர் நாடகங்களை உரிய மெய்ப்பாடுகளுடன் குரல் ஏற்றத்தாழ்வுகளுடன், உணர்ச்சியுடனும் படிக்கச் செய்தல். |
| **4.** | **எழுதுதல்** | | |
| 4.1 | பொருள் உணர்வுக்கேற்ப இடைவெளிவிட்டு எழுதுதல் | * உணர்வுக்கேற்ப நிறுத்தக்குறிகள் எடுத்தாளப்பட்ட உரைப்பகுதிகள் | * பாடம் தொடர்பான விடைகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்ப இடைவெளி விட்டு நிறுத்தற்குறிகளுடன் எழுதுதல். |
| 4.2 | பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுதல் | * உரைப்பகுதி | * புரிந்து கொண்ட பாடக்கருத்துகளை விடைகளாக ஏற்ற பக்கத் தலைப்புகளுடன் எழுதுதல் |
| 4.3 | உறவுமுறைக்கடிதம் எழுதுதல்/நாட்குறிப்பு எழுதுதல் | * உறவுமுறைக் கடிதம் எழுதுதல் (தாய், தந்தை, அத்தை, மாமா மற்றும் நண்பர்கள்)<br>* அன்றாட நிகழ்வுகளை நாட்குறிப்பாக எழுதுதல் | * மாணவர்களுக்கு உறவுமுறைக் கடிதத்தின் மாதிரியை அளித்து அதே போன்று வேறு கடிதங்களை எழுது வைத்தல்; நாட்குறிப்பு எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி நாட்குறிப்பு எழுதப் பயிற்றுவித்தல். |
| 4.4 | கட்டுரை / உரையாடல் எழுதுதல் | * கட்டுரை –கலைவாணர், நாட்டுக்குழைத்த நல்லோர், கட்டுரைப் பகுதிகளை விளக்கும் எடுத்துக்காட்டுகள் | * கட்டுரைகள், உரையாடல்கள், முதலியவற்றைப் படிக்கச் செய்து கட்டுரை உறுப்புகள் எவை என்பதையும், எவ்வாறு கட்டுரை அமைய வேண்டும் என்பதையும் விளக்கி கட்டுரை எழுத வைத்தல். |
| **5.** | **படைப்பாற்றல்** | | |
| 5.1 | பாடல் எழுதுதல், பாடுதல் | * வெவ்வேறு சூழல்கள்அடங்கிய படங்கள், பாடல்கள் | * குழந்தைகள் விரும்பும் பறவை, விலங்கு, பூக்கள் படங்கள் கொடுத்தும், சொற்கள் அளித்தும், சொற்றொடர் அளித்தும் பாடல் எழுதச் செய்தல். பாடலின் முதல் அடியை |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
| --- | --- | --- |
| | | அளித்து இரண்டாம் அடியை நிறைவு செய்யச் செய்தல்; பாடச் செய்தல். |
| 5.2 தனிநடிப்பு | * நடித்துக் காட்டத்தக்க பாடப்பகுதி | * நாடகக் கதைமாந்தரின் இயல்பினை ஏற்று நடித்துக் காட்டச் செய்தல். இலக்கிய மாந்தர்கள் போன்று வசனங்கள் பேசி நடிக்கச் செய்தல். |
| 5.3 செயல்திட்டம்–இதழ் தயாரித்தல் | * மாணவர்களின் படைப்புகளான நகைச்சுவைத் துணுக்குகள், ஓவியம், கடிதம், கட்டுரை, உரையாடல் போன்ற படைப்புகள் | * கையெழுத்து இதழுக்குத் தேவையான படங்கள் வரைதல், நகைச்சுவைத் துணுக்குகள், கதைகள், புதிர்கள் எழுதுதல், சேகரித்தல், கடிதம், கட்டுரை, உரையாடல் எழுதுதல், ஓவியம் வரைதல், சேகரித்தல் :– அனைத்தையும் தொகுத்து இதழாக அமைக்கப் பயிற்றுவித்தல் |
| **6. நடைமுறை இலக்கணம்** | | |
| 6.1 சொற்றொடர் அமைப்பு முறை அறிதல் | * எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றை விளக்கத்தக்க வாக்கியங்கள் | * பாடநூலிலுள்ள சொற்றொடர்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எவை என்பதையும், பிரித்து அறிவது எப்படி என்பதையும், இலக்கணப்படி அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் பயிற்றுவித்தல்.<br>* சொற்றொடர்கள் அமைந்து வரும் முறை அறிதல். பயனிலைக்குப் பொருத்தமான எழுவாய், செயப்படுபொருளை உருவாக்குதல்.<br>(எ.கா) பாடினாள் – வாணி பாடினாள்.<br>– வாணி பாட்டுப் பாடினாள். |
| 6.2 இணைப்புச் சொற்களை அறிந்து பயன்படுத்துதல் | * எனவே, ஏனெனில், ஆனால், ஆகையால் போன்ற இணைப்புச் சொற்கள் பயன்படுத்தப்பட்ட வாக்கியங்கள்<br>(எ.கா) தாத்தா முறுக்குத் | * வினாக்களுக்கு விடை தரும்போதும், கட்டுரைகள் எழுதும் போதும், பேசும் போதும், கலந்துரையாடும் போதும் இணைப்புச் |

| | திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| | | தின்னவில்லை **ஏனெனில்** அவருக்குப் பற்கள் இல்லை | சொற்கள் எவை, அவற்றை எவ்விடங்களில் எவ்வாறு பயன்படுத்துவது எனப் பயிற்றுவித்தல் |
| 6.3 | மரபுத் தொடர்கள் | * பல்வேறு பொருள்களில் வழங்கப்படும் மரபுத்தொடர்கள் | * மரபுத்தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை எழுதச் செய்தல் |
| 6.4 | நேரிணை, எதிரிணைச் சொற்கள் பயன்படுத்துதல், மயங்கொலிப் பிழை தவிர்த்தல் | * நேரிணை, எதிரிணை சொற்கள் எடுத்தாளப்பட்ட பகுதி, மயங்கொலிச் சொற்களை விளக்கத்தக்க சொற்றொடர்கள் | * சீரும் சிறப்பும், வெற்றி தோல்வி போன்ற நேரிணை, எதிரிணைச் சொற்களைக் கண்டறிதல்; அவற்றை பயன்படுத்தி தொடர்கள் அமைத்தல்; பேசுதலில் அவற்றைக் கையாளுதல் ஆகியவற்றை ஊக்குவித்தல். மயங்கொலிப் பிழை தவிர்த்துப் பேசச்செய்தல் |
| 7. | **தானே கற்றல்** | | |
| 7.1 | சிறுசிறு கதைகளைப் படித்தல் | * குழந்தைகளுக்கான நன்னெறிக் கதைகள், பொழுதுபோக்குக் கதைகள் | * துணைப் பாடங்களாக அளிக்கப்பட்டுள்ள சிறுசிறு கதைகளைப் படித்தல்; அதன் மூலம் நன்னெறிகளை அறிதல்; வாழ்க்கையில் பயன்படுத்த ஊக்குவித்தல். |
| 7.2 | குழந்தைகள் கலைக்களஞ்சியத்தைப் பயன்படுத்துதல் | * படங்களோடு கூடிய விவரங்கள் அடங்கிய குழந்தைகள் கலைக்களஞ்சியம் | * கலைக்களஞ்சியம் என்றால் என்ன என்பதையும், அதில் அடங்கியுள்ள செய்திகள் எவை என்பதையும், செய்திகளை கலைக்களஞ்சியம் துணை கொண்டு எவ்வாறு கண்டறிவது என்பதையும், அதன் மூலம் அறிதல் திறனை மேம்படுத்துவதையும் கற்றுக் கொடுத்தல். |
| 7.3 | அகரமுதலியைப் பயன்படுத்திப் பொருளறிதல் | சொற்பொருள் அகரமுதலி | * ‘அகர முதலி’ துணை கொண்டு எவ்வாறு சொற்களின் பொருளை அறிவது என்பதையும், பாடநூலின் இறுதியில் அளிக்கப்பட்டுள்ள அகரமுதலியில் (சில சொற்களை அளித்து) |

| திறன் பகுதி / திறன் | பாடப்பொருள் | கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் |
|---|---|---|
| | | பொருளைக் கண்டறியச் செய்தல். |
| 8. சொல்லாட்சித் திறன் | | |
| 8.1 சொற்களஞ்சியம் பெருக்குதல் | * பாடப்பகுதியில் உள்ள கடினச் சொற்கள் | * பாடநூலில் அளிக்கப்பட்டுள்ள செய்யுள் பகுதிகள் மூலம் சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்ளுதல், கடினச் சொற்களுக்குப் பொருள் கண்டறிவதன் மூலம் மாணவனின் அறிந்த சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்; சொற்களைப் பொருளிற்கேற்ப சேர்த்தல், பிரித்தல், சொற்றொடர் அமைத்தல், மொழி விளையாட்டு, புதிர் விளையாட்டு போன்றவற்றின் மூலம் மொழி ஆளுமைத் திறனை வளர்த்தல்.<br>* பொருளறிதல், எதிர்ச்சொல் எழுதுதல், பிரித்து எழுதுதல், சேர்த்து எழுதுதல், சொற்றொடர் அமைத்தல், மொழி விளையாட்டு, புதிர் விளையாட்டு |
| | * திருக்குறள் (12), நீதிநெறிவிளக்கம் (3), கும்மிப் பாடல் (1 ) , கதைப்பாடல் (1 ) | |